செ.வெ.எண்: 03 / செப்டம்பர் நாள் : 02.09.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

# தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பாக மாவட்ட அளவிலான கேரம் விளையாட்டுப் போட்டி 06.09.2017 அன்று நடைபெறவுள்ளது

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், இராமநாதபுரம் பிரிவின் சார்பில் மாவட்ட அளவிலான கேரம் விளையாட்டுப் போட்டி 06.09.2017 அன்று காலை 9.00 மணியளவில் இராமநாதபுரம் சீதக்காதி சேதுபதி விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

2017-2018 ஆம் ஆண்டு மாவட்ட அளவிலான கேரம் விளையாட்டுப் போட்டி தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், இராமநாதபுரம் பிரிவின் சார்பில் 06.09.2017 அன்று காலை 9.00 மணியளவில் இராமநாதபுரம் சீதக்காதி சேதுபதி விளையாட்டரங்கில் கீழ் குறிப்பிட்ட இரு பிரிவுகளாக நடத்தி ஒற்றையர் / இரட்டையர் போட்டிகள் நடைபெறவுள்ளது.

இளநிலைப் பிரிவு (மழலை வகுப்பு முதல் 5-ஆம் வகுப்பு வரை) (Juniors - Pre School to $5^{th}$ Standard)

முதுநிலைப்பிரிவு (6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை ) ($6^{th}$ Standard to $12^{th}$ Standard) என இரண்டு பிரிவுகளாக சிறுவர்கள் / சிறுமியர்கள் இருபாலருக்கும் போட்டிகள் தனித்தனியாக நடத்தப்படவுள்ளன.

போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் மாணாக்கர்கள் தங்களது பிறப்பு சான்றிதழ் நகலை தாங்கள் பயிலும் பள்ளியின் தலைமையாசிரியர் / தலைமையாசிரியை அவர்களின் சான்றொப்பம் பெற்று சமர்ப்பித்திட வேண்டும்.

இதில் ஒற்றையர் மற்றும் இரட்டையர் பிரிவில் முதல் மூன்று இடம் பெறும் வீரர் / வீராங்கணைகளுக்கு சான்றிதழ்கள் மற்றும் பரிசுத்தொகை Direct Benefit Transfer முறையில் வழங்கப்படும். மாவட்ட அளவில் முதலிடம் பெறுபவர்கள் மாநில அளவிலான போட்டிக்கு தேர்வு செய்யப்படுவார்கள்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**